செ. கு. எண்:228 நாள் :22.12.2014

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.ஓ. பன்னீர்செல்வம்** அவர்களின்

## அறிக்கை – **22.12.2014**

**1)** ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து ஈரோடு வட்டத்தில் உள்ள காளிங்கராயன் வாய்க்கால் ஆயக்கட்டு நிலங்களுக்கு இரண்டாம்போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து ஈரோடு வட்டத்தில் உள்ள காளிங்கராயன் வாய்க்கால் ஆயக்கட்டு நிலங்களுக்கு இரண்டாம்போக பாசனத்திற்காக **23.12.2014** முதல் தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது. இதனால், ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டத்தில் உள்ள **15,743 ஏக்கர்** நிலங்கள் பயன் பெறும்.

2) கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து வலது மற்றும் இடதுபுறக் கால்வாய்களில் இரண்டாம்போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து வலது மற்றும் இடதுபுறக் கால்வாய்களில் இரண்டாம்போக பாசனத்திற்காக **23.12.2014** முதல் தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது. இதனால், கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டத்தில் உள்ள **9,012 ஏக்கர்** நிலங்கள் பயன் பெறும்.

3) கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பாரூர் பெரிய ஏரியிலிருந்து ஏரியின் கிழக்கு மற்றும் மேற்கு பிரதான கால்வாய்களில் இரண்டாம்போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடுமாறு விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பாரூர் பெரிய ஏரியிலிருந்து ஏரியின் கிழக்கு மற்றும் மேற்கு பிரதான கால்வாய்களில் இரண்டாம்போக பாசனத்திற்காக **23.12.2014** முதல் தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது. இதனால், கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டத்தில் உள்ள **2,396 ஏக்கர்** நிலங்கள் பயன் பெறும்.

**ஓ. பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9